2nd November 1962]

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

* **1100 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா, குப்பநத்தம் கிராமத்தில் விதைப் பண்ணை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா, விவரமென்ன ?

(இ) அப்படியானால், அது சம்பந்தமாய் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

கிராம சாலைகள் திட்டம் (மாணிக்கப்பங்கு கிராமம்)

* **1101 கேள்வி.—திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாயூரம் தாலுகாவில், தரங்கை மாணிக்கப் பங்கு மீனவர்களுக்காக ரஸ்தா போடுவதும், கப்பி போடுவதுமான திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The work for metalling of the road from Tranquebar to Manickapangu village has already been sanctioned by the Panchayat Union Council, Sembanarkoil under the Village Works Programme and will be executed shortly.

Lorries (accidents)

* 1102 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to control the speed and to improve the condition and upkeep of lorries so as to avoid frequent accidents on the roads?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளோடுகூட, லாரிகள் போகும் ஸ்பீடை லிமிட் செய்யும் ஒரு கருவியைப் பொருத்தவும், குறிப்பிட்ட அளவு எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவர்கள்தான் லாரி டிரைவர்களாக அமர்த்தப்பட வேண்டுமென்றும், குறிப்பிட்ட மைல் தூரத்திற்கு மேல் போகக் கூடிய லாரிகளுக்கு இரண்டு டிரைவர்கள் போட்டு நடுவிலே டிரைவரை மாற்றவேண்டுமென்றும் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸ்பீடைக் குறைத்து ஓரளவுக்கு மேல் அதிகமான வேகத்தில் ஓட்டாமலிருக்க 'மெகானிகல் டிவைஸ்' அமைப்பதுபற்றிப் பரிசிலனை செய்யப்பட்டு அது

---

a Printed as Appendix IV on pages 519–520.